# இரண்டாந் தவணைக் கணிப்பீடு 2022

தரம் - 2

## சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

மாணவர் பெயர்: ..........................................  1 மணித்தியாலம்

(01) சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. அதிக சூரியஒளி காரணமாக உடலில் உணரப்படுவது.
   I ) உடல்வியர்த்தல்  II ) பசி ஏற்படுதல்

2. உடலுக்கு கடுமையான சூரியஒளி படுவதால் ஏற்படும் பாதிப்பு
   I ) தோல் நோய்கள் ஏற்படல்  II ) காய்ச்சல் ஏற்படல்

3. வேளையுணவில் கீரை வகைகளை சேர்த்துக் கொள்வதால்
   I ) உடல் பருமன் குறையும்  II ) கண் பார்வை கூர்மையாகும்.

4. காற்றுக் காரணமாக சூழலில் ஏற்படக்கூடிய மாற்றம்
   I ) மரங்களில் கிளை முறிதல்  II ) வெள்ளப்பெருக்கு ஏற்படல்

5. மருத்துவ குணமுள்ள கீரை
   I ) மரவள்ளி கீரை  II ) அரைக்கீரை

6. உணவு விரையமாகும் வழிகளில் ஒன்று
   I ) அன்னதான நிகழ்வின் போது  II ) பசியுடன் இருக்கும் போது

7. தவறான உணவு பழக்கங்களால் ஏற்படும் உடல் பாதிப்பு
   I ) அதிகம் கொழுத்த உடல்  II ) நோய்களற்ற உடல்

8. போஷாக்குள்ள உணவுகள்
   I ) சோறு, மீன், கீரை, கிழங்கு, பழங்கள்
   II ) புடிங், கேக், லட்டு, பாண், பனிஸ்

9. கேட்டல் மூலம் தகவல் பெறும் சாதனம்
   I ) பத்திரிகை  II ) வானொலி

10. வீட்டைச் சுத்தம் செய்ய பயன்படுவது
   I ) கால் துடைப்பம்  II ) பூச்செண்டுகள்  (20 புள்ளிகள்)

kalvi.lk

02. சரியாயின் √ எனவும் பிழையாயின் X எனவும் அடையாளமிடுக.

1. நேரகாலத்துடன் பாடசாலைக்கு வருகைத் தர வேண்டும் (…………)
2. பாடசாலையின் சட்டத்திட்டத்துக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் (…………)
3. பொலித்தீன் பயன்பாட்டை குறைத்துக்கொள்ள வேண்டும் (…………)
4. உணவுகளை வீண்விரயம் செய்வது நல்ல பழக்கமாகும் (…………)
5. சந்தையில் பொருட்களைப்பெற வரிசையில் செல்ல வேண்டும் (…………)

(10 புள்ளிகள்)

03. கீழ்வரும் படங்களின் பெயர்களை எழுதுக.








……………………………… ……………………………… ………………………………

Education கல்வி

(6 புள்ளிகள்)

04. இடைவெளி நிரப்புக.

( மீன், வளங்களை, நேர்த்தியாக, தாழிடல், தோல் நோய், நட்சத்திரம், கீரை வகைகளை, தொலைக்காட்சி, பொலித்தீன்)

1. அதிக சூரியஒளி காரணமாக ……………………………………………… ஏற்படும்.
2. இரவு வானில் ……………………………………………………… தென்படும்.
3. அன்றாடம் எமது உணவில் ……………………………………… சேர்த்துக் கொள்ள வேண்டும்.
4. கேட்டல், பார்த்தல், ஊடாக …………………………………யில் தகவலைப் பெறலாம்.
5. ……………………………………………… பாவனையை தவிர்த்துக் கொள்வதனால் சூழலைப் பாதுகாக்கலாம்.

kalvi.lk

(10 புள்ளிகள்)

(05) இணைக்குக.



ஒலிபெருக்கி



முரசு

கடிதம்



மேசைத் தொலைபேசி



தபாற்காரர்



(10 புள்ளிகள்)

(06) சரியான விடையை எழுதுக.

1. எமது நாளாந்த தேவைகள் 02 எழுதுக.

.................................................................................................

2. நாம் கடைக்குச் செல்லும் போது கொண்டுச் செல்ல வேண்டியவை 02 தருக.

.................................................................................................

3. வளர்ப்பு பிராணிகளிடம் இருந்து எமக்கு கிடைப்பவை எவை

.................................................................................................

4. சந்தையில் வாங்கும் பொருட்கள் 02 தருக.

.................................................................................................

5. நாம் கொண்டாடும் பண்டிகைகள் 02 தருக.

.................................................................................................

07. கீழ்வருவனவற்றை வரைக.

1. சந்தைக்காட்சி (24 புள்ளிகள்)

2. இரவு வானம்

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page